**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**

**OS No. 24/2019**

**2024** ம் வருடம் செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் பிரதிவாதி தரப்பில் 3 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு.திருநாவுக்கரசு, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சக்திவேல் (DW3) | கிராமம் | : | |
| தந்தை / கணவர் பெயர் | : | தொழில் | : | |
| வயது | : | | | |

<u>10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. தாவா சொத்து எனது தாத்தா வேலுத்தேவருக்கு கிரையப் பாத்தியப்பட்டது. எனது தாத்தா இறந்த பிறகு எனது தகப்பனாருக்கு தாவா சொத்துக்கள் கிடைக்கப்பெற்று எனது அப்பா அனுபவம் செய்து வந்தார்.

2. தாவா சொத்து சர்வே எண்.271/1, 271/2 என்று 2 உட்பிரிவுகளாக உள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 93 செண்ட் ஆகும்.

3. அதில் வடபுறம் உள்ள 6 ஏக்கரை எனது அப்பா கடந்த 21.05.1993 ம் தேதியன்று 10 ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4. அதனடிப்படையில் 10 ம் பிரதிவாதியின் பெயருக்கு சர்வே எண்.271/1 ல் கண்ட சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் 10 ம் பிரதிவாதியின் பெயருக்கு 6 ஏக்கருக்கு பதிலாக 4.86 ஏக்கர் அளவிலான சொத்திற்கு மட்டுமே பட்டா ஏற்பட்டுள்ளது. தாவா சொத்தின் மீதி பாகத்திற்கு என் அப்பா பெயரில் சர்வே எண்.271/2 ஆக பட்டா

ஏற்பட்டுள்ளது.

5. 10ம் பிரதிவாதிக்கு வரவேண்டிய 1.14 ஏக்கர் அளவிற்கான பட்டா வழங்கப்படாமல் எனது அப்பாவின் பெயரில் ஏற்பட்ட பட்டாவில் மேற்படி அளவுகளையும் சேர்த்து பட்டா எண்.271/2 ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. 10ம் வாதி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 6 ஏக்கர் நிலத்தையும், மீதி தென்புறம் உள்ள 3.93 ஏக்கர் நிலத்தை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

7. சாமுவேல் மகன் இருளனுக்கு தாவா சொத்து எந்த காலத்திலும் பாத்தியப்படவில்லை. இருளன் ஜமீன் காலத்தில் தாவா சொத்தில் ஒத்திக்கு எடுத்து உளுது விவசாயம் செய்து வந்துள்ளார் என்றால் சரிதான். ஒத்தி ஜமீன் காலத்தில் திருப்பப்பட்டதால் இருளனுக்கும், அவரது வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான்.

8. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எந்த பாத்தியமும், அனுபவமும் இல்லை.

ஒம்/J.சங்கீதா<br>
மாவட்ட உரிமையியல் மற்றும்<br>
நீதித்துறை நடுவர்,<br>
கடலாடி (மு.கூ.பொ)